# சபை குரு மடல்...

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை; உபா. 15:06

கர்த்தருக்குள் அன்பான திருச்சபையின் மக்களனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பாலும் தேனும் ஓடுகின்ற கானான் தேசத்திற்கு அவர்களை அழைத்துக் கொண்டு வந்தார். நாற்பது ஆண்டு காலம் வழி நடந்து வந்தார்கள். அவர்களை வழி நடத்த தமது தாசனாகிய மோசேயை எற்படுத்தியிருந்தார். எந்தவொரு ஆலோசனை தேவைப்பட்டாலும் மோசே ஆண்டவரிடமே கேட்டு இஸ்ரவேல் மக்களை வழி நடத்திச்சென்றார். ஆண்டவரும் மோசேயோடு முகமுகமாய் பேசினார். அது மட்டுமல்ல தமது ஜனத்திற்கு கொடுக்கப்போகும் தேசத்தைக் குறித்தும், அவர் அருள் செய்ய இருக்கும் ஆசீர்வாத்தைக் குறித்தும் திட்டமும் தெளிவுமாக மோசேயின் வாயிலாக அவர்களுக்கு தெரிவித்தார். அவைகளில் ஒன்றுதான் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற வாக்கியமான உபாகமம் 15:06 ஆகும். ஏனெனில் ஆண்டவர் ஆசீர்வதிக்கும் போது அது அளவிடமுடியாத, எண்ணிக்கைக்கு அடங்காத ஒன்றாயிருக்கும். எனவே அங்கு குறைவு ஏற்படுவதற்கான வாய்ப்பே இல்லை, மாறாக நிரம்பி வழிகின்ற ஒன்றாகவேயிருக்கும். எனவே கடன்வாங்கும் அளவிற்கு பற்றாகுறை இல்லாமல், கடன் கொடுக்கிற அளவுக்கு நிறைவு இருக்கும். இதற்கு அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் இரண்டு மட்டுமே. ஒன்று யெகோவாவாகிய ஆண்டவரைத்தவிர அவர்கள் வேறு தேவர்களை சேவிக்கவோ தொழுதுகொள்ளவோ கூடாது. இரண்டாவது அவர் கொடுத்த நியாயப்பிரமாணங்களையும், கட்டளைகளையும் கைக்கொள்ளவேண்டும். அவ்வாறு அவர்கள் நடந்துகொண்டால் தேவனாகிய கர்த்தர் சொன்னபடியே அவர்களை ஆசீர்வதிபப்பதாக கூறினார். அன்பான ஆண்டவரின் பிள்ளைகளே நாமும் குறைவற்ற வாழ்வு வாழ ஆண்டவரை சேவிக்கவேண்டும் மட்டுமல்ல அவர் திருமறை கூறும் வழிகளில் நடக்க வேண்டும் அப்போது நம்மையும் உபாகமம் 15:06ன் படியே ஆசீர்கவதிப்பார். ஆண்டவரின் ஆசி என்றும் நம்மில் நிலைத்திருப்பதாக.

இப்படிக்கு
ஆண்டவரின் அருட்பணியில்

**அருள்திரு. P. ஆபிரகாம்**